Registered as Newspaper

கம்பியூட்டர் முறையில்
வர்ண புகைப்படங்களை
துரித கதியில்,
குறைந்த செலவில்,
நிறைந்த சேவையில்;
பெற்றுக்கொள்ள
*
ஆர்த்தி
ஜுவலர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

ஆர்த்தி
எழில் மிகு காட்சிகளை
தத்ரூபமாகத் தந்திடும்
வர்ண
புகைப்படச் சுருள்களைப்
பெற்றுக்கொள்ள
ஆர்த்தி
ஜுவலர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T'Pohne: 23628

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ பங்குனி மீ 27 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப் பிறை 28 (09-04-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:122

## கல்லூரி அதிபர் தாக்கப்பட்டு வீதியால் இழுத்து வரப்பட்டார்!

மட்டக்களப்பு, ஏப். 9

காத்தான்குடி அரசினர் பாடசாலை அதிபர் ஒருவர் ஊர்காவல்படையினரால் நையப்புடைக்கப்பட்டார். அத்துடன் பிரதான வீதியூடாக கோஷங்களின் மத்தியில் ஊர்வலமாகவும் இழுத்து வரப்பட்டார்.

கைமுறிந்த நிலையில் அதிபர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை நடந்த இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

காத்தான்குடி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அதிபர் அல்ஹாஜ் எம். எம். ஏ. அஸீஸ் ஹாஜியார் (வயது 53). மெத்தைப்பள்ளி என்னும் இடத்தில் முஸ்லிம் அனாதை விடுதி ஒன்றையும் நிர்வகித்து வருகின்றார்.

வீதியால் ஊர்காவற் படையினர் சிலர் வந்து கொண்டு இருந்த சமயம், அனாதை விடுதி மாணவன் ஒருவன் வீதியில் நிற்பதைக் கண்டனர்.

ஏன் நிற்கிறாய்? என்று கேட்டார்கள் மடக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

# போராளிகளை மீள அனுப்புக

## இந்தியா, பிரிட்டனிடம் இலங்கை அரசு கேட்கிறது

கொழும்பு, ஏப்ரல் 9

தமிழ்ப் போராளிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புமாறு இந்தியாவையும் பிரிட்டனையும் இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளது.

இது சம்பந்தமான மகஜர்கள் இந்திய, பிரிட்டிஷ் அரசுகளுக்கு இரண்டு நாடுகளிலும் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது

இந்தியா வந்திருந்த பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெப்ரி ஹோ, மற்றைய நாடுகளைச் சேர்ந்த தீவிரவாதிகளை அந்தந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்புவதற்கு ஏதுவாகத் தமது நாட்டுச்சட்டத்தில்திருத்தம் செய்ய பிரிட்டன் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்தியத் தீவிரவாதிகளை நாடு கடத்தும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்வது குறித்தும் அவர் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம், இந்தியாவிடமும், பிரிட்டனிடமும் தமிழ்ப் போராளிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கேட்டுள்ளது இது குறித்து நிர்வாகப் பேச்சுவார்த்தை நடத்தத் தாம் விருப்பம் கொண்டுள்ளதாகவும் இருநாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## குளத்தில் மிதந்த 4 சடலங்கள்

### தம்பிலுவிலில் ஐவர் பலி

மட்டக்களப்பு, ஏப்ரல் 9

தம்பிலுவில் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை ஆயுதப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து நேற்றுக் காலை குளமொன்றில் மிதந்துகொண்டிருந்தநான்கு சடலங்கள் மீட்கப்பட்டன.

நான்கு சடலங்களையும் உறவினர்கள் எடுத்துக் கொண்டுபோய் அடக்கம் செய்தனர்.

திங்கட்கிழமை தேடுதலின்பின்னர் படுகாயத்துடன் ஆயுதபடையினரால் அழைத்துச் செல்லப்பட்ட நபரும் இறந்து விட்டார் என்று தெரிய வருகின்றது.

தம்பிலுவில் தேடுதலில் மொத்தமாக ஐந்து தமிழர்கள் இறந்ததாகத் தெரிகிறது.

கடந்த திங்கட்கிழமை (4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கி முன் இன்று மறியல் இல்லை

நல்லூர், ஏப்ரல் 9

இலங்கை வங்கிக் கிளைகள் முன்பாக இன்று மறியல் போராட்டம் நடைபெறமாட்டாது.

இதுசம்பந்தமாக அடகு வைத்தோர்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

யாழ்மாவட்ட இலங்கை வங்கிக் கிளைகள் முன்பாக இன்று நடைபெறவிருந்த மறியல் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

நகைகளை கையளிப்பது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சினுல் நடத்தப்பட்ட கூட்டத்தில் வருடப் பிறப்பை அடுத்து ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கிளைமூலம் நகைகளைக் கையளிப்பது என்ற புதிய திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான அறிவுறுத்தல்களை அரச அதிபர் எமக்குத் தெரிவித் (4ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்

கொழும்பு, ஏப்ரல் 9

பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துள்ளது.

நேற்றுக் காலை திடீரென கொழும்பு வந்த "எம்.எம்.5பாரிஸ்" என்ற அந்தக் கப்பல் எத்தனை நாட்கள் இங்கு தங்கி நிற்கும் என்பது பற்றிய விபரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

அதன் வருகைக்கான நோக்கும் தெரியாது.

# நயினாதீவு மக்களுக்கு இரவுத் தடை

## 8 மணிக்குப் பின்னர் நடமாடக் கூடாதாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

நயினாதீவில் வாழ்பவர்கள் இரவு 8 மணிக்குப் பின்னர் வெளியே நடமாடக் கூடாது.

அப்படி நடமாடுபவர்கள் தீவிரவாதிகள் என்றே கணிக்கப்படுவர்.

பாதுகாப்புப் படை வட்டாரங்கள் நயினாதீவு மக்களை இவ்வாறு எச்சரித்துள்ளதாக அறிய வந்துள்ளது.

இந்த உத்தரவை மீறி இரவு 8மணிக்கு வீட்டை விட்டு வெளியே நடமாடுபவர்கள் சுடப்படுவார்கள் என்றும் அச்சுறுத்தப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

நேற்றுக் காலை நயினாதீவு துறைமுகத்தில் மக்களை சோதனைக்காக நிறுத்திய போது பாதுகாப்புப் படையினர் இரவு 8 மணிக்குப் பிறகு எவரும் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என அறிவுறுத்தப்பட்டனர்.

இதுவும் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு உத்தரவு போல் உள்ளது என்று நயினாதீவு மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

நயினாதீவுப் பகுதியில் இப்போது அடிக்கடி ஆயுதப்படையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

### தொண்டமானாறு பகுதியில் இருவர் மரணம்

பலாலி, ஏப்ரல் 6

நேற்று முன்தினம் தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து வடக்கு கிழக்கு பக்கங்களாகப் புறப்பட்ட சிப்பாய்கள் வழியில் இருவரைச் சுட்டனர் என்று கூறப்படுகின்றது.

சூடுபட்ட இருவரும் அவ்விடத்திலேயே மரணமானுர்கள். சடலத்தை இன்னமும் எடுக்கமுடியாமல் உள்ளதெனவும், அதனால் இறந்தவர்கள் யாரென அடையாளம் காணப்படவில்லையெனவும் கூறப்படுகின்றது.

### ஜனாதிபதி ரஷ்யா செல்கிறார்

கொழும்பு, ஏப்ரல் 9

ஜனாதிபதி ஜெயவர்த்தன ஜூலையில் ரஷ்யா செல்கிறார்.

இப்படி வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்தது.

பதவிக்கு வந்த பின்னர் ரஷ்யாவுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன விஜயம் செய்வது இதுவே முதல் தடவை

### சுபநேரம்

9 4- 1986

புதன்கிழமை

சுபநேரம்:
4 37 முதல் 6 07 வரை

ராகுகாலம்:
12 07 முதல் 1 37 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## ஹெலிக்கொப்டர் தாக்குதல் தொடர்கிறது

பலாலி, ஏப்ரல் 9

நேற்றும் கட்டுவன் குரும்பசிட்டி, மயிலிட்டிப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடந்தது.

காலை 8 45 மணி அளவில் பயிலிட்டி, குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளைச்சுற்றிநோட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஆங்காங்கு சுடத் தொடங்கியது.

விமானங்கள் பலாலி விமான நிலையத்துக்கு வந்திறங்குகின்றபோதும் புறப்படுகின்ற போதும் விமான நிலையப் பகுதிகளைச் சுற்றி ஹெலிக்கொப்டர் சுடுவது வழக்கம்.

இதனால் தற்போது விமானம் வரும் நேரங்களிலும் புறப்படும் நேரங்களிலும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொள்கின்றனர்.

## ஆயுள்வேதக் கல்லூரி: நேற்றும் மறியல்

நல்லூர், ஏப்ரல் 9

வட இலங்கை ஆயுள் வேதக் கல்லூரி மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாகப் பரீட்சையைப் பகிஷ்கரித்து மறியல் செய்தனர்.

தமது கோரிக்கைகளுக்கு இதுவரை எவரும் செவிசாய்க்கவில்லை என்றும், நிர்வாகம் தொடர்ந்து மௌனமாக இருக்குமானால் தாம் ஒன்று திரண்டு போராடப் போவதாக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

சுமார் 50க்கும் மேற்பட்ட பெண்களும் ஆண்களும் நேற்றைய மறியலில் கலந்து கொண்டனர்

கல்லூரி நேற்று இரண்டாவது நாளாக மூடப்பட்டிருந்தது.

### பலாலி வீதி வீதித்தடை நீக்கம்

நல்லூர், ஏப்ரல் 9

கொள்ளையை ஆட்சேபித்து பலாலி வீதியில் போடப்பட்டிருந்த வீதித்தடை நேற்று நீக்கப்பட்டது.

மருத்திதுறை வீதியில் நேற்றும் வீதித் தடை அமுலில் இருந்தது

## கரையோரப் பகுதிகளை அழித்து விட்டு உட் பகுதியை தாக்குவதே அரசின் திட்டம்

### வடபகுதி நிலைமை குறித்து அமிர்

சென்னை, ஏப். 8

கரையோரப் பகுதிகளை அழித்துக்கொண்டு யாழ் குடாநாட்டின் உட்பகுதிகளைத் தாக்குவதுதான் இலங்கை அரசின் திட்டம். கரையோரப் பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி படைத்தளபதி எச்சரிப்பது, பெரும் தாக்குதல் ஒன்றுக்குத் திட்டமிடப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அறிக்கை ஒன்றில் குற்றம் சாட்டி உள்ளார்

சன அடர்த்தியான பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறச் சொல்வது பெரும் குற்றமாகும்.

பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு தமிழர் மீது யுத்தம் ஒன்றை நடத்த இலங்கை அரசு முஸ்தீபு செய்து வருகிறது.

தமிழரை அழிவில் இருந்து காப்பாற்ற இந்தியா சகல விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

இப்படி திரு. அ அமிர்தலிங்கம் கேட்டுக் கொண்டார்.

### உப்புவெளியில் துப்பாக்கி வேட்டு

திருகோணமலை, ஏப். 9

கடந்த ஞாயிற்றுக்கிழமை உப்புவெளியில் ஜமாலியாவுக்கு அருகில் உள்ள ஆயுதப்படை முகாமில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

நள்ளிரவில் போராளிகள் தாக்க வந்தார்கள். ஆயுதப்படையினர் திருப்பிச்சுட்டு விட்டார்கள்— இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

இதனிடையில் ஜமாலியாப் பகுதி முஸ்லிம் மக்கள் அப்பகுதியில் இருந்து ஆயுதப்படை முகாமை அகற்றும்படி அரசாங்க மேலிடத்தைக் கேட்டுள்ளனர்.

### மூவாயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

கொழும்பு, ஏப்ரல் 9

மே மாதத்தில் 3,000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

இதற்கான அனுமதியைத் திறைசேரி கல்வி அமைச்சுக்கு வழங்கி விட்டது

சங்கீதம், விவசாயம், நடனம், கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய துறைகளுக்கே பட்டதாரி ஆசிரிய நியமனம் நடைபெறும்.

### கொழும்பில் உஷார் நிலை

கொழும்பு, ஏப்ரல் 9

புத்தாண்டுக் காலத்தையொட்டி கொழும்பு மாநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு வார காலத்துக்கு இப் பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார் நிலையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பில் துப்பாக்கி சத்தங்கள்

மட்டக்களப்பு, ஏப். 9

மட்டக்களப்பு நகரில் நேற்று இரவு 7 மணியளவில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

15 நிமிடங்கள் வரையில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

றெக்கெட் லோஞ்சர் தாக்குதலை அடுத்து

# தொண்டமானறிலும் ஹெலிக்கொப்டர் சூடு

பலாலி, ஏப்ரல் 9

நேற்றுக் காலை 10 மணியளவில் தொண்டமானறு இராணுவ முகாமுக்கு அண்மையில் வடக்கு, கிழக்குப் பக்கமாக ஹெலிக்கொப்டர் மூலம் சுடப்பட்டது.

ஹெலிக்கொப்டர் சூட்டைத் தொடர்ந்து ஷெல் தாக்குதல் இடம் பெற்றது

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:—

தொண்டமானறு இராணுவ முகாமில் காவலுக்கு கட்டப்பட்டுள்ள கோபுரத்தை நோக்கி போராளிகளால் றெக்கெட் லோஞ்சர் ஏவப்பட்டது.

இதைத் தொடர்ந்து முகாமில் இருந்து சரமாரியாகச் சுடப்பட்டதுடன் ஷெல்லும் அடிக்கப்பட்டது.

அத்துடன் பலாலியில் இருந்து தொண்டமானறு நோக்கி விரைந்த ஹெலிக்கொப்டர் அப் பகுதிகளைச் சுற்றி 15 நிமிடமளவில் சுட்டது.

மிக உயரத்தில் இருந்தே ஹெலிக்கொப்டர் சுட்டதனுல் குறிப்பிடத்தக்க சேதங்கள் ஏற்படவில்லை.


30 நிமிடத்துக்குப் பின் அவசரம் அவசரமாக தொண்டமானறு முகாமில் கீழிறங்கிய ஹெலிக்கொப்டர் உடனடியாக மேலெழுந்து பலாலியை நோக்கிச் சென்றது.

### சிப்பாய் பலி

போராளிகளின் இத் தாக்குதலால் காவல் கோபுரம் சாய்ந்துள்ளதாகவும் காவலுக்கு நின்ற சிப்பாய்கள் இறந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது

பிந்திக் கிடைத்த செய்திகளின் படி சிப்பாய் ஒருவர் இறந்ததாக அறிய வந்தது

முச்சந்தி முனி



இந்தியாவோடை நீண்ட கால ஒப்பந்தம் செய்த மாதிரி, எங்களோடையும் செய்யுங்கோ எண்டு அங்கை போய் நடிச்சாலும் நடிப்பார்... ஆருக்குத் தெரியும்.!

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம் பங்குனி மாதம் 28ஆம் நாள் (10-4-86) வியாழக்கிழமை பகல் 10.15 மணி தொடக்கம் 12 25 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

| திருநிறை செல்வன் | | திருநிறை செல்வி |
|---|---|---|
| ஜெகநாதன் | ★ | நந்தினி |
| (லங்கா சீமெந்து லிமிட்டெட் K.K.S.) | ★ | (அரசினர் வைத்தியசாலை, அம்பாறை.) |
| அவர்களுக்கும் | ★ | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்,

திரு. திருமதி நா. செல்லையா
Dr. & Dr. (Mrs.) நாகநாதர்
'தேவி வாசம்', சங்கானை.

திரு. திருமதி ச. கணேசன்
வேளா தோப்பு,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷோபாவைப் போல் நடிக்க ஆசையாம் ஜீவிதாவுக்கு

வெறும் கிளாமர் நடிகையாகவே நானும் எனது திரையுலகப்பயணத்தைத் தொடர முடியாது என்பதை உணர்கிறேன்.

மாறுபட்ட வேடங்களில், அழுத்தமான நடிப்பை வெளிப்படுத்தும் விதமாகப் பாத்திரங்கள் கிடைக்கும் பொழுது நிச்சயம் நான் ஒப்புக்கொள்வேன்

இப்படி கூறுபவர் நடிகை ஜீவிதா தான்.

இதுபற்றி ஜீவிதா மேலும் கூறுகையில்,

தன்னுடைய திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும் போது, யார்தான் மறுப்பார்கள்?

எப்படி இருந்தாலும் தற்போதைய சூழலில் வரவேற்புள்ள வேடங்களை ஏற்பதும், வெற்றி தோல்விகளை அனுசரித்து என்னை நிலை நிறுத்திக் கொள்வதும் முக்கியமான விஷயங்களாகத் தெரிகின்றன.

மண்டி (இந்திப்) படத்தில் ஸ்மிதா பாட்டீல் போல், பசி படத்தில் ஷோபா போல் மறக்க முடியாத நடிப்பை வழங்கி ரசிகர்கள் மத்தியில் என்றென்றும் நினைவில் நிற்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

அத்தகைய வேடங்களை ஏற்கும் பக்குவமும், சூழலும் எனக்கு நிச்சயம் கிடைக்கும் என்றே நம்புகிறேன்.

படத்திற்குப் படம் நடிப்பு பற்றிய சர்ச்சைகள் என்னை நானே படிப்படியாக பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறேன். வெளிவரப்போகும் படங்கள் இந்த உண்மையை உங்களுக்குப் புலப்படுத்தும்

எப்படிப்பட்ட வேடங்களை ஏற்று நடித்துக் கொண்டிருந்தாலும் உங்களிடமிருந்து "ஜீவிதா ஒரு நல்ல நடிகை" என்ற பெயரை நிச்சயம் பெறுவேன் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது

நிகழ் காலத்தின் யதார்த்தப் பாத்திரங்களை நான் ஏற்றுக் கொண்டதால் இது வரை கடினமான பயிற்சியோ, ஊன்றிக் கவனிக்க வேண்டிய சிரமமோ ஏற்பட்டதில்லை'' என்றார்.

தினசரி சினிமா

## ஒட்டேகா எச்சரிக்கை

ரெகுசிகல்பா, ஏப்ரல்.8

நிக்கராகுவா அரசுக்கு எதிராக போராடும் 'கொண்ட்ரு' குழப்பக் கும்பலுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவிவருவது எமது ஆத்திரத்தைத் தாண்டி விடுவதாகும்.

இவ்வாறு ஜனாதிபதி டானியல் ஒட்டேகா அமெரிக்க உள்நாட்டு வாஜெரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா தொடர்ந்து இவ்வாறு நடந்து கொள்ளுமானால் அமெரிக்காவுடன் நிக்கராகுவா யுத்தமொன்றையே நடத்த வேண்டி வரும் என மேலும் தெரிவித்துள்ளார்.

தெ. ஆபிரிக்க விடுதலை இயக்கம் மீதான—

# அரசுத் தடையை நீக்கவேண்டும்

### ஸாம்பிய அதிபர் கவுண்டா பேட்டியில் வலியுறுத்து

ஹறேர், ஏப். 8

விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மற்றும் அங்குள்ள விடுதலைப் போராட்ட அமைப்புகளின் செயல்பாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை தென் ஆபிரிக்க வெள்ளை இன அரசு உடனடியாக நீக்கிவிட வேண்டும்.

இவ்வாறு ஸாம்பிய அதிபர் டாக்டர் கென்னத் கவுண்டா கருத்துத் தெரிவித்துள்ளார்.

யூகோஸ்லேவிய நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அதிபர் கவுண்டா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தமது பேட்டியில்;

தென் ஆபிரிக்க அரசுத் தலைவர் போத்தா தடை நீக்கத்துக்கான முடிவைத் தாமதிக்காமல் எடுப்பது பயனுள்ளதாகும்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள கறுப்பின விடுதலைத் தலைவர் மண்டெலாவையும் மற்றும் கறுப்பின விடுதலை வீரர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என மேலும் வலியுறுத்தியுள்ளார்.

ஸாம்பியாவின் ஹறேர் நகரில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகள் அமைப்பின் மாநாடு பற்றி கேட்கப்பட்டபோது;

சமாதானத்தை உயிர் மூச்சாகக் கொண்டது, சுரண்டலையும் ஆதிக்கிய அடிமைத்தனங்களையும் முழுமூச்சாக எதிர்க்கும் அமைப்பு அது

இந்த இயக்கத் தோற்றத்தின் தந்தையராக மறைந்த பாரதப் பிரதமர் நேருவும் எகிப்தின் நாசரும் யூகோஸ்லேவியாவின் மார்ஷல் டிட்டோவும் மதிக்கப்படவேண்டியவர்கள் என்று தெரிவித்துள்ளார்.

அணிசேரா நாடுகள் இயக்கத்தின் 8 வது மாநாடான ஹறேர் மாநாட்டில் தென் ஆபிரிக்க அரசின் இனவாதவிவகாரம் சிறப்பாக ஆராயப்படும் எனவும் அந்தப் பேட்டியில் கவுண்டா வலியுறுத்திக் கூறியுள்ளார்.

## 'சார்க்' அமைப்பின் அதிகாரிகள் மாநாடு

### பாரத மகளிர் நலத்துறை அமைச்சர் தொடக்கி வைக்கிறார்

புதுடில்லி, ஏப். 8

தென் ஆசியப் பிராந்திய ஒத்துழைப்புச் சங்க அதிகாரிகள் மட்ட ஆலோசனை மாநாடு டில்லியில் கூடுகிறது.

'வளர்ச்சிப் பணியில் மகளிர் பங்கு' என்னும் தலைப்பிலான விடயங்கள் பலவும் மாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

மகளிர் நலத்துறை ஸ்டேட் மந்திரி மார்கிரட் ஆல்வா மாநாட்டைத் தொடக்கி வைக்கிறார்.

இம்மாநாட்டின் ஆலோசனைகள் மீதான பரிந்துரைகள் 'சார்க்' அமைப்பின் மந்திரிகள் மட்ட மாநாட்டில் முன் வைக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## பஞ்சாப்பில் 250 பேர் கைது

சண்டிகார், ஏப். 8

பஞ்சாப்பில் ஜலந்தர் பகுதியில் நடந்த கொலைச் சம்பவங்களை அடுத்து 250 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஞ்சாப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவே இந்த நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## நல்வாழ்வு நிதியம்

சென்னை, ஏப். 8

சட்டத்தரணிகளுக்கான நல்வாழ்வு நிதியம் தமிழ்நாட்டில் துவக்கப்பட இருக்கிறது.

தமிழ்நாடு அரசு சட்ட ஆணைக்குழுவின் கவனத்துக்கு இத்திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது.

## பயண இடைத்தரிப்பு வீஸா வேண்டும்

### பிரிட்டன் குடிவரவு விதிகள் இலங்கையருக்கு அறிவிப்பு

லண்டன், ஏப் 8

பயணங்களை மேற்கொள்ளும் போது பிரிட்டனில் தரித்துச் செல்ல விரும்பும் இலங்கையர் பிரிட்டன் ஏற்றுக் கொள்ளக் கூடிய இடைத்தரிப்பு விஸா வைத்திருக்க வேண்டும்.

இவ்வாறு பிரிட்டனின் குடிவரவு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடைத்தரிப்பு எவ்வளவு காலமானாலும் அதற்குரிய வாசகால அனுமதி (விஸா) அவசியம்.

தொடர்ந்து வேறு நாடுகளுக்குச் செல்ல விஸா அனுமதி வைத்திருப்பவர்கள்கூட இடைத்தரிப்பு விஸா வைத்திருக்காவிடில் பிரிட்டனில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இவ்வாறு அந்த விதிகளில் மேலும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையர் பிரிட்டனிலிருந்து ஐரிஷ் குடியரசுக்குச் செல்வதற்கும் விஸா வேண்டும் எனவும் மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

வெளி உலகில்

## வழிபாட்டு இடங்களின் புனிதம் கெடுகிறது

### வன்முறை ஆக்கிரமிப்பு காரணம் என்கிறது பாரத ஒருமைப்பாட்டு சபை

புதுடில்லி, ஏப் 8

புனித வழிபாட்டிடங்களை வன்முறையாளர்கள் ஆக்கிரமிப்பது சட்டமீறல் மட்டுமல்ல; அந்த தலங்களின் புனிதத் தன்மையை கெடுப்பதுமாகும்.

இவ்வாறு பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையில் டில்லியில் கூடிய தேசிய ஒருமைப்பாட்டுச் சபைக் கூட்டத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

சபை ஆராய்ந்த விடயங்கள் தொடர்பான தீர்மானங்களில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

குறிப்பாக பஞ்சாப் சீக்கியர் பொற்கோவிலின் ஒரு பகுதியை வன்முறையாளர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.

அதன் புனிதத்தைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். வன்முறையாளர்கள் வெளியேற்றப்பட வேண்டும்

சமூகங்களுக்கிடையே சுமுகமான நல்லெண்ணமும் சமாதானமும் நிலைபெற ஆக்கபூர்வமான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

நேர்மையும் நற்சிந்தனையும் அற்ற வன்முறையாளர்களின் கொடுஞ்செயல்களால் அப்பாவி மக்களின் உயிர்கள் பலி எடுக்கப்படாது மேலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரதத்தின் அமைதியைக் கெடுக்கும் முயற்சிகள் எல்லைகளில் ஏற்பட்டுள்ள ஊடுருவல்களால் உற்சாகப்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தடுக்க எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என பிரதமர் ராஜீவ் காந்தி சபையில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

மக்கள் முகம்

## முற்போக்கு எழுத்தாளர் சங்க செயலவை

யாழ்ப்பாணம், ஏப் 9

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ். கிளையின் புத்தாண்டு செயலவை உறுப்பினர்கள் வருமாறு:-

தலைவர்: பேராசிரியர் நந்தி.

துணைத் தலைவர்கள்: பேராசிரியர். கா. சிவத்தம்பி, வரதர், நீர்வை பொன்னையன், சொக்கன், தெணியான், திரு. இ. முருகையன், ஈழத்துச் சோமு.

இணைச் செயலாளர்கள்: கலாநிதி. சபா ஜெயராசா, சாந்தன்.

பொருளாளர்: திரு.க. சண்முகலிங்கம்.

செயலவை உறுப்பினர்கள்: திரு. இ. சிவானந்தன், கலாநிதி சி. மௌனகுரு, கலாநிதி. சோ. கிருஷ்ணராசா, திரு எஸ் அகஸ்தியர், திருமதி கோகிலா மகேந்திரன், திரு டொமினிக் ஜீவா, திரு. சிதம்பர திருச்செந்திநாதன், திரு வே. சிவராசா, திரு. பு சிறிதர் சிங்

## குடத்தனை வடக்கு இணக்க சபை

பருத்தித்துறை, ஏப் 9

குடத்தனை வடக்கு இணக்கசபைத் தெரிவுகள் அண்மையில் நடைபெற்றன.

தலைவர். திரு ஆர். அருமைத்துரை. துணைத் தலைவர்:- திரு க. கனகரத்தினம் செயலாளர்:- திரு இ மகேந்திரன். துணைச் செயலாளர்:- திரு. த தருமதாசு. பொருளாளர்:- திரு. தி. தியாகரத்தினம், செயற்குழு உறுப்பினர்கள்:- திரு. க தர்மலிங்கம், திரு ஐ சூரசங்காரம், திரு கு அருளானந்தம், திரு. இ சோதிலிங்கம், திரு. கா. பாலசுந்தரம், திரு ந தவராசா.

## நியமனம்

வட்டுக்கோட்டை, ஏப்.9

பண்டத்தரிப்பு கிராமிய அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக டாக்டர் இ. செல்வநாயகம் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டார்.

இதற்கு முன் இவர் புத்தளம் மாவட்டத்தில் முந்தல் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றியவர்.

## பாதிக்கப்பட்டோர் விவரம் சேகரிப்பு

பருத்தித்துறை, ஏப். 9

பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாமிலிருந்து 1000மீற்றர் பாதுகாப்பு வலய எல்லைக்குள் வசித்தவர்களின் விவரத்தையும் பாதுகாப்பு வலயச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் விவரத்தையும் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் சேகரித்து வருகிறார்.

பாதிக்கப்பட்டவர்கள் பருத்தித்துறை பிரஜைகள் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகளுக்குப் புகலிடமா?

## இந்தியா நெருப்புடன் விளையாடுகிறது

### பௌத்த சங்கத் தலைவர் சொல்கிறார்

கொழும்பு, ஏப் 9

தீவிரவாதிகளுக்கு இடமளிப்பதன் மூலம் இந்தியா நெருப்புடன் விளையாடுகிறது.

இலங்கை பௌத்த சங்கத் தலைவர் திரு. எட்மண்ட் பளுகொட, பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து வரும் நாடு இந்தியா. அஹிம்சை இரண்டு நாடுகளினதும் பாரம்பரிய சொத்து.

வன்செயல், தீவிரவாதம் ஆகியவற்றில் நாட்டம் கொள்வது இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்காது.

இந்திய மண்ணில் வைத்து தீவிரவாதத்துக்கு நேரடியான, மறைமுகமான ஆதரவு வழங்கப்படுவது, இலங்கையில் உள்ள மிதவாத சக்திகளுக்கு பலமூட்டுவதாக இருக்காது

இப்படி திரு எட்மண்ட் பளுகொட பிரதமர் காந்திக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

பலாலிப் பகுதியில் இருந்து வெளியேறிய

# நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கல்வி தொடரமுடியாத நிலை

காங்கேசன்துறை ஏப்,9

பலாலிப் பகுதியில் இருந்து பதற்றம் காரணமாக வெளியேறிய குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சிறுவர்கள் தாம் கற்ற கல்வியைத் தொடரமுடியாமல் தத்தளிக்கிறார்கள். ஆகவே அவர்கள் தமது கல்வியைத் தொடர ஆவன செய்யவேண்டும்.

வலி, வடக்கு பிரஜைகள் குழுவின் இணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் மயிலிட்டி, ஊறணி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. ரி. தேவராஜன் தலைமையில் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில், கலந்து கொண்ட மயிலிட்டி பலாலி பகுதிகளைச் சேர்ந்த பிரஜைகள் குழுக்கள் மேற்படி சிறுவர்களின் கல்விநிலைபற்றி எடுத்துக் கூறின

இவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு உரிய ஏற்பாடுகளை யாழ். அரசாங்க அதிபரும், கல்விப் பணிப்பாளரும் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை கூட்டத்தில் விடுக்கப்பட்டது.

கூட்டத்தில் மயிலிட்டி, ஊறணி பிரஜைகள் குழுத்தலைவர் திரு ரி. தேவராஜன் கூறியதாவது;

இன்று பொதுமக்கள் பல விடயங்களிலும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். தமது தேவைகளை நிறைவேற்ற முடியாது கஷ்டப்படுகின்றனர். நிலைமை மேலும் மோசமாகி வருகிறது.

இந்நிலையில் பிரஜைகள் குழுக்களின் கையில் பாரிய பொறுப்பு உள்ளது எந்த விதத்தில் மக்களுக்கு உதவ முடியுமோ அவ்விதத்தில் உதவ வேண்டும். மக்களின் அனைத்து தேவைகளையும் கவனித்து நிறைவேற்றும் பணியில் பிரஜைகள் குழுக்கள் ஈடுபடவேண்டும்.

அத்துடன் சம்பவங்கள் குறித்த முழுவிவரங்களையும் சேகரிப்பதிலும் பிரஜைகள் குழு கவனம் எடுக்கவேண்டும். வருங்காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்க இவ்விவரங்கள் உதவ முடியும்.

இப்படி அவர் கூறினார்.

காங்கேசன்துறை பிரஜைகள் குழு தலைவர் சட்டத்தரணி அ. குமர... பிரஜைகள் குழுக்கள் சேவையின் அடிப்படையில் செயல்படவேண்டும். இன்றுள்ள நிலையில் இக்குழுக்களே மக்களின் பாதுகாப்பையும், தேவைகளையும் உறுதிப்படுத்தக் கூடிய நிலையில் உள்ளன. இக்குழுக்களில் உள்ளவர்கள் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என்றார்.

## வண்ணாந்துறை உரக்களஞ்சியம்

பருத்தித்துறை, ஏப் 9

புலோலி மேற்கு வண்ணாந்துறையில் 85 ஆயிரம் ரூபா செலவில் உரக்களஞ்சியம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இக்கட்டடத்தில் கிருமிநாசினி விற்பனை நிலையம், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பணிமனை, விவசாய விஸ்தரிப்பு சேவை அதிகாரிக்கான பணிமனை, கால்நடை வைத்திய அதிகாரியின் புலோலி மேற்கு பகுதிக்கான உப அலுவலகம் ஆகியன செயற்படும்.

இதற்கான நிதியை யாழ். மாவட்ட சமூகநல சேவை உதவி ஆணையாளர் திரு கே பரம... ஒதுக்கீடு செய்துள்ளார்.

## பருத்தித்துறை பிரஜைகள்குழு கூட்டம்

பருத்தித்துறை, ஏப்.9

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை பருத்தித்துறை சிவன்கோயில் பர்வதபத்தினி கலாமண்டபத்தில் நடைபெறும்

## பாலர் பாடசாலை பயிற்சி முகாம்

சாவகச்சேரி, ஏப். 9

அறவழிப் போராட்டக் குழுவினரால் நடத்தப்படும் 25 பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஐந்து நாள் பயிற்சி முகாம் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெற இருக்கிறது

இம்மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகி 20 ஆம் திகதி வரை நடைபெறும் இப்பயிற்சிமுகாமுக்கான ஏற்பாடுகளை பாலர்பாடசாலை இயக்குநர்சபை மேற்கொண்டுள்ளது.

வீமன்காமம் மகா வித்தியாலயத்தில்

## ஆங்கிலத்தின் அவசியம் குறித்து உரை

பலாலி, ஏப் 9

சர்வதேச ரீதியிலான அறிவுகளை நாம் பெற்றுக்கொள்ள ஆங்கிலம் முக்கியமானது. ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் எமது கல்வித்திட்டத்தில் உணரப்பட்டுள்ள போதிலும் எமது மாணவர்கள் அதற்குத் தகுந்த முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை இந்நிலை மாறவேண்டும்.

வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஆங்கில தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திருமதி. அருள் செல்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. மு. சிவராசா தலைமையில் விழா நடைபெற்றது.

அதிபர் தமது தலைமையுரையில் 'ஆங்கில தின விழாவுக்கு எமது பழைய ஆங்கில ஆசிரியர் ஒருவரை பிரதம விருந்தினராக நாம் அழைத்து கௌரவித்தது ஆசிரியர்களுக்கு — அவர்கள் தம் கடமைக்கு நாம் அளிக்கும் கௌரவமாகும் என்றார்.


## மிகவும் பணிவான வேண்டுகோள்!

குருநகர் கென்பார் அன்ரன், மண்டைதீவு அலெக்சாண்டர், இருவருக்கும் சொந்தமான லொறி [40 ஸ்ரீ 2466]யில், அண்மையில் கொழும்பிலிருந்து ஏற்றிவரப்பட்ட டீசல், மண்ணெண்ணெய், என்ஜின் எண்ணெய் மற்றும் நாளுவித வீட்டுப் பாவனைப் பொருட்கள் பளைக்கு அருகாமையில் வைத்து இனங்காணப்படாதவர்களால் லொறியுடன் கடத்தப்பட்டது.

* மறுதினம் மேற்படி லொறி பாதிப்பற்ற நிலையில், (மேற்படி பொருட்கள் எதுவும் இல்லாத நிலையில்) பொது வீதியில் விடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.
* டீசல், மண்ணெண்ணெய், என்ஜின் எண்ணெய் போன்றன கடத்தியவர்களால் பாவிக்கப்பட்டுவிட்டாலும்,

பொதுமக்களுக்குச் சொந்தமான T.V., ஆட்டுக்கல், துணிவகைப் பார்சல்கள், குக்கர், எவர்சில்வர் பாத்திரங்கள் போன்ற பொருட்களை, எமது நிலைக்கிரங்கி உடன் கீழ்க்கண்ட முகவரியில் சேர்க்கும் வண்ணம் மிகவும் வினயமாய் வேண்டுகின்றோம்.

முகவரி:

59, மீனாட்சி அம்மன் வீதி,
பண்ணை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

நீ நன்மை செய்தால் நன்மை பெறுவாய். தீமை செய்தால் தீமை பெறுவாய்.

-ஜேம்ஸ் அலன்.


உதயன்

இல. 15, ... ஒழுங்கை, ... வீதி

தொலைபேசி: 24605
22073

09 04 86


## கால்நடை நோய்; தடுப்பு நடவடிக்கை அவசியம்

புங்குடுதீவில் கால்நடைகள் பெருமளவில் மடிவதாகச் செய்தி வந்துள்ளது. இதற்குக் காரணம் தொற்று நோயாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இப்போது கடும் வெயில் காலம். அதனால் தொற்று நோய்கள் பரவும் சாத்தியம் மிகவும் அதிகம் கால்நடைகள் தொற்று நோயால் மடிவதாகக் கண்டு பிடிக்கப்பட்டால் தடுப்பு நடவடிக்கைகள் உடன் அவசியம்.

வடக்கு வரண்ட பிரதேசம். புற்றரைகள் குறைவு எனினும் குடாநாட்டில் பசு இல்லாத வீடுகள் குறைவு பண்டைக் காலம் தொட்டு இந்த வழக்கம் எம்மவர் மத்தியில் இருந்து வருகிறது. பசுவைத் தாய் போலப் பேணி வளர்க்கும் மரபும் நம்மவர்க்குச் சொந்தமானது.

வீட்டுக்கு ஒரு பசு இருந்தால் அது செல்வத்தின் சின்னம் என்று எமது முன்னோர்கள் கருதினார்கள். தமது வயல் வேலைகளுக்கு நண்பனாக இருந்து உதவும் மாடுகளைக் கௌரவித்து பட்டிப் பொங்கல் கொண்டாட்டத்தை உண்டாக்கினார்கள்.

இன்றும் கூட வசதி குறைந்த பல குடும்பத்தினர் தமது அன்றாட வருவாயில் பெரும் பகுதியை மாடு வளர்ப்பதன் மூலமே பெறுகிறார்கள்.

ஆடு வளர்ப்பும் அதே அளவுக்கு எமது பகுதிகளில் நடைபெறுகிறது.

ஆகையால் கால்நடை வளர்ப்பு அன்றும் இன்றும் வடபகுதி மக்களின் கிராமப் பொருளாதாரத்தின் பிரதான அம்சங்களில் ஒன்றாக விளங்குகிறது.

எமது பொருளாதாரம் பல வகைகளாலும் பாதிக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வரும் இக்கால கட்டத்தில் கால்நடை வளர்ப்பு பாதிக்கப்படுவது குறித்து நாம் அசிரத்தையாக இருக்க முடியாது; இருக்கவும் கூடாது.

புங்குடுதீவில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவக்கூடும் அதற்கு இடம் கொடாமல் தடுப்பு நடவடிக்கைகளை இப்போதே செய்தாக வேண்டும்.

அது சம்பந்தமான அறிவுரைகளை கிராம மட்டத்தில் பிரசாரம் செய்வதும் அவசியம். கால்நடை வளர்ப்போர் மிருக வைத்தியப் பகுதியை தேடிச் செல்லும் வரைக்கும் காத்திருக்காது, நடமாடும் சிகிச்சை நிலையங்களை ஏற்படுத்தி ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று தடுப்புச் சிகிச்சைகளைச் செய்ய வேண்டும்.

கொழும்புத் தலைமைப் பீடம் இவ்விஷயத்தில் கவனம் எடுக்கும் என்ற நம்பிக்கை எமக்கில்லை.

குடாநாட்டில் மிருக வைத்தியப் பகுதியில் பணிபுரியும் அதிகாரிகள் தங்கள் மண்ணுக்குச் செய்யும் தொண்டாக எண்ணி இதனைச் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

கால்நடைத் தொற்று நோய்த் தடுப்புக்கு அரசாங்கம் வழங்கும் மருந்துகளை மட்டும் தான் சிகிச்சைக்குப் பயன்படுத்தலாம் அவை போதியளவு கையிருப்பில் இல்லை. இவ்வாறு சாட்டுச் சொல்லி உங்கள் பணியைத் தட்டிக் கழிக்க வேண்டாம் எனவும் கேட்கிறோம்.

இலகுவில் செய்யக்கூடிய சுதேச வைத்திய முறைகள் பலன் தரவல்லவையானால் அவற்றைப் பரந்த அளவில் பயன்படுத்த முயற்சியுங்கள் நீங்கள் மிருக வைத்தியத் துறையில் பெற்ற அறிவும், அனுபவமும் உங்கள் சொந்த மண்ணுக்கு பயன்படட்டும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தை உங்கள் தாயகத்துக்குத் தொண்டு செய்யக் கிடைத்த நல்ல சந்தர்ப்பமாகக் கருதிக் கருமம் ஆற்றுங்கள்.

# அமைதிப் பேச்சு ஒரு நாடகம்

அமைதிப் பேச்சுக்கள் உலகத்தை ஏமாற்ற ஜெயவர்த்தனா அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட ஒரு நாடகம்

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி வேலுப்பிள்ளை பிரபாகரன் இந்திய மாத சஞ்சிகை "ஜென்டில் மன்"னுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அப்பேட்டியின் இரண்டாம் பகுதி இன்று பிரசுரமாகிறது

பேட்டி கண்டவர்: ஜஸ்விந்தர் சிங்.

கேள்வி: உங்களுடைய குடும்பப் பின்னணி என்ன? பெற்றோர்களுடன் உறவு எப்படி உள்ளது. அவர்களுடன் தொடர்பு வைத்திருக்கிறீர்களா?

பதில்: நான் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். எனது தந்தை ஓர் அரசாங்க ஊழியராக இருந்தார். எனது இரண்டு மூத்த சகோதரிகளுக்கும் திருமணமாகி விட்டது.

இளம் வயதிலேயே நான் புரட்சிகர அரசியலுக்குள் இழுக்கப்பட்டு விட்டேன். அதன் பின்னர் நான் 'தேடப்பட்டு வரும்' ஒருவனாகிவிட்டேன்.

19 வயதாக இருக்கும் போது நான் வீட்டை விட்டு வெளியேறி விட்டேன். அதன் பின்னர் நான் தலைமறைவானேன் பின்னர் நான் பெற்றோர்களுடனான தொடர்பை இழந்து விட்டேன்.

கேள்வி: தமிழ்ப் போராளித்துவத்தின் சின்னமாக நீங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றீர்கள். உங்களை ஒரு பெரும் வீரனாகவே உங்கள் அமைப்பும் உங்களைப் பிரதிபலிக்கின்றது.

தீவிர கொள்கையுடையவர் என்ற முறையில் தனிப்பட்ட வீரவணக்கத்தைப்பற்றி எந்த வகையில் நியாயப்படுத்துகிறீர்கள்?

பதில்: இப்படியான வர்ணனைகளுக்கும் எடுத்துக் காட்டல்களுக்கும் நான் உதவ முடியாது. அடக்கு முறைக்கு ஆளாகியுள்ள எனது மக்களின் அரசியல், சமூக விடுதலையே எனது ஒரே சிந்தனை.

எனது செயல்பாடுகள் குறித்து மக்களுக்கு நன்கு தெரியும்.

சரியான பாதையில் தங்களை வழிநடத்துவேன் என்று மக்கள் என்மீது நம்பிக்கை வைத்து உள்ளார்கள்.

அதனால்தான் என்மீது மக்கள் பேரன்பு காட்டுகிறார்கள்.

இந்த வெளிப்பாடுகள் மக்களின் அன்பைத்தான் காட்டுகின்றன.

கேள்வி: இலங்கையின் தற்போதைய நிலையை எப்படி நீங்கள் மதிப்பிடுகின்றீர்கள்?

பதில்: இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை மிகவும் ஆபத்தானது.

தமிழ் இனம் இனக் கொலையை எதிர்நோக்கியுள்ளது

இலங்கை ஆயுதப்படையினர் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். படுகொலைகள், மானபங்கப்படுத்தல், தீவைப்புமுதலியவற்றுக்கு எமது மக்கள் இலக்காகி உள்ளனர்.

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டுள்ளார்கள்.

யுத்த நிறுத்தம் என்ற போர்வையில் தமிழரை ஈவிரக்கமற்ற முறையில் அழித்தொழிக்கும் வேலையில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது

இராணுவ வெறி கொண்ட சிங்களத் தலைமை, நீதியான அமைதித் தீர்வு ஒன்றைக் கொண்டுவரும் உண்மை விருப்பம் கொண்டதாக இல்லை

தமிழரை, ராணுவ பலத்தைக் கொண்டு அடக்கி வைக்கவே சிங்களத் தலைமை உறுதி பூண்டுள்ளது.

கேள்வி: இலங்கை அரசுக்கும் தமிழர் பிரதிநிதிகளுக்கும் இடையே நடந்த பேச்சுக்கள் பற்றி நீங்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் என்ன?

பதில்: சமாதானப் பேச்சுக்கள் பிரயோசனமற்றவை. உலகை ஏமாற்ற ஜெயவர்த்தன அரசினால் நடத்தப்பட்ட நாடகம் இது.

சமாதானத்தை விரும்புவனைக்காட்டிக்கொண்டாலும் அமைதித் தீர்வு ஒன்றைக் காணுவதில் ஜெயவர்த்தனவுக்கு நாட்டமே இல்லை.

தமிழரின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தானை திட்டவட்டமான யோசனைகளை சமர்ப்பிக்க ஜெயவர்த்தன தவறிவிட்டார்.

சமாதானப் பேச்சு என்ற போர்வையில் தமிழ் மக்கள்மீது இராணுவப் பயங்கரமும் இனப் படுகொலையும் இலங்கை அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

கேள்வி: யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஜெயவர்த்தன அரசு இராணுவ பலத்தை அதிகரித்துக் கொண்டது என்று சில காலத்துக்கு முன்னர் நீங்கள் சொன்னீர்கள்

பதில்: அதுதான் உண்மை நிலை யுத்த நிறுத்தம் என்ற போர்வையில் பெரிய அளவிலான யுத்தம் ஒன்றுக்கு தேவையான இராணுவ பலத்தைப் பெறுவதில் ஜெயவர்த்தன அரசு ஈடுபட்டது.

தேசிய பட்ஜட்டில் இருந்து இராணுவச்செலவுக்கு பெருந்தொகைப் பணத்தை ஜெயவர்த்தன அரசு செலவழித்து வருகின்றது பெரிய அளவில் பயங்கர ஆயுதங்கள் வாங்கப்படுகின்றன

கட்டாய இராணுவ சேவைக்கான சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்றி உள்ளது

முழுச்சிங்கள இனமுமே யுத்த நிலைக்குத் தயாராக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் புதிய இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன.

தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய விதத்தில் சிங்

## உலகத்தை ஏமாற்ற அது நடத்தப்பட்டது

களச் சிப்பாய்களுக்கு பாகிஸ்தானைக் கொண்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது வெளிநாட்டுக் கூலிப்படைகளும் வந்துள்ளன.

ஜெயவர்த்தன அரசு, பேச்சுக்கள் மூலம் அமைதித் தீர்வு காணுவதை விட, இராணுவத் தீர்வு காணுவதிலேயே அதிக நாட்டம் கொண்டு உள்ளது என்பதையே பாரிய யுத்த ஆயுதங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன

கேள்வி: கடைசிமுறை நீங்கள் டில்லி வந்தபோது பெரிய அரசியல் சலுகை ஒன்றை அடைந்தீர்கள். அதுதான் யுத்தநிறுத்த மீறல்கள்பற்றி விசாரணை நடத்தக் கண்காணிப்புக் குழு நியமனம் செய்ய இலங்கை அரசு ஒப்புக் கொண்டமை.

வன்செயல்களைக் கட்டுப்படுத்தி உகந்த சூழ்நிலை ஒன்றை உருவாக்க அந்த கண்காணிப்புக்குழு உதவியதா?

பதில்: எந்தக் கண்காணிப்புக் குழு பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்? இலங்கை அரசின் ஆயுதம் தாங்கிய குண்டர்கள் நடத்தும் யுத்த நிறுத்த மீறல்பற்றி விசாரிக்கப்பட்டதா?

எமது மீனவர்களைக் கொல்ல சிங்கப்பூரில் இருந்து மேலும் பீரங்கிப் படகுகளை இலங்கை அரசு வாங்கியது உண்மை.

பேச்சுக்கள் நடக்கும் போது அதிகளவில் குடிமக்கள் கொல்லப்பட்டதும் உண்மை.

இராணுவ, கடற்படை... விமானப் படையினரின் உதவியுடன் இராணுவ நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

கேள்வி; செயலளவில், அமைதிப் பேச்சுக்கள் தோல்வி கண்டு விட்டன என்று எண்ணுகின்றீர்களா?

பதில்: நல்லது. சாதகமான முடிவுகளைக் கொண்டுவர முடியாது பேச்சுக்கள் தோல்வி கண்டுவிட்டன.

கேள்வி: பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சாத்தியக் கூறு இல்லை என்பது அதன் கருத்தா?

பதில்: இந்திய நிலையைப் பொறுத்து அது உள்ளது.

கேள்வி: இரத்தக்களரியை நிறுத்தக் கூடிய முறையில் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

பதில்: ஓர் உண்மையான தீர்வுக்கு ஜெயவர்த்தன வரமாட்டார் என்பதை கடந்த கால அனுபவம் சரித்திரம் கூறுகிறது

தான் ஒரு சமாதான விரும்பி என்பதைக்காட்டவே ஜெயவர்த்தன இந்த நாடகத்தை ஆடுகிறார்

ஜெயவர்த்தன அரசின் கடுமையான பிடிவாதப் போக்கினால்தான் இந்திய அரசாங்கத்தினால் விரும்பிய முடிவை அடைய முடியாது போயிற்று

இச் சூழ் நிலையில் நாம் ஒரு Dead End நிலைக்கு வந்து விட்டோம். இரு தரப்பாரையும் ஒன்று சேர்க்க இந்தியா முயற்சிக்க வேண்டும், இந்தியா கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

கேள்வி: திரு. ரொமேஷ் பண்டாரியுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது இப்படிச் சொன்னீர்களா?

பதில்: ஆம். நாம் சொன்னோம்.

கேள்வி: போராளிகள் குடிமக்களைத் தாக்கியதாக பத்திரிகைச் செய்தி வெளிவந்ததே இந்த ஆயுதப் போராட்டத்தில் குடிமக்களின் நிலைபற்றி உங்கள் கொள்கை என்ன?

பதில்: அ பத்திரிகைச் செய்தியில் உண்மையே இல்லை. விடுதலை இயக்கத்திற்கு மாசு கற்பிக்கவே அவர்கள் இப்படியான பொய்களைப் பரப்புகிறார்கள்

நாமல்வத்தை யில் நடந்த சம்பவங்களில் நாம் பங்குபற்றவில்லை எமது சகோதர இயக்கங்களும் பங்குபற்றவில்லை. நாங்கள் குடிமக்களைத் தொட்டதே இல்லை

அவர்கள் எமது மக்களைத் தாக்கும்போது நாம் எமது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றோம்.

(தொடரும்)

## இன அடிப்படையில் அரசியல்வாதிகளின் சிந்தனைகள்

### மன்சூர் கூறுகிறார்

அம்பாறை, ஏப். 9

இன்று நாட்டில் ஒரு சில அரசியல்வாதிகளின் சிந்தனை இன அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் எமது சமூகங்களின் நிலை எப்படி அமையுமென்பதை அச்சத்துடனேயே நோக்க வேண்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப். ஏ. ஆர். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கல்முனைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் கல்முனைப்பிரதேச இளைஞர் மாநாடு ஒன்றை அண்மையில் நடத்தியது.

இந்த மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று நாம் எதிர்நோக்கும் பிரச்சினை நிம்மதியான வாழ்க்கை இல்லாததுதான். எம்பிரதேசங்களில் அச்சமின்றி வாழக்கூடிய சூழ்நிலை தற்சமயம் இல்லை.

பயங்கரவாதம், பயங்கரவாதம் என எல்லோரும் கூற முனைந்து விட்டோமேதவிர இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணலாமென ஆலோசனை கூறுபவர்கள் மிகக்குறைவாகவே உள்ளனர் என்றார்.

## ஹெலிக்கொப்டருக்கு அஞ்சி வானுக்கு கீழ் பதுங்கியவர் காயம்

நல்லூர், ஏப். 9

பயணிகள் சென்ற வான்மீது ஹெலிக்கொப்டர் துப்பாக்கிச் சூடு இடம் பெற்றது

சாரதியின் சாதுரியத்தினால் பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர். வான் நடத்துனர் வானின் கீழ் நசியுண்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் தனங்கிளப்பில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் சேரதீவில் இருந்து சாவகச்சேரியை நோக்கி பிரயாணிகள் வானொன்று வந்து கொண்டிருந்தது.

அப்பொழுது தூரத்தில் பறந்து கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்று திடீரென தாழப் பறந்து வந்து வான்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இதனை அடுத்து வானை சாரதி அதிவேகமாக ஓடிச் சென்று ஒரு மரத்தின்கீழ் நிற்பாட்டினார்.

தொடர்ந்தும் துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றன.

பயணிகள் இறங்கி அங்குள்ள பஸ் ஹோல்ட் ஒன்றினுள் பதுங்கி இருந்தனர்.

வான் நடத்துனர் வானுக்கு கீழே படுத்துக் கொண்டார்.

சற்றுநேரத்தின் பின்னர் ஹெலிக்கொப்டர் சென்று விட்டதை அறிந்து வானை சாரதி வெளியே எடுத்தார்.

அப்பொழுது வானுக்கு கீழே படுத்திருந்த நடத்துனர் மீது வான் ஏறியது.

இதனால் அவர் காயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

மற்றைய பயணிகள் எவரும் காயமின்றி மயிரிழையில் உயிர் தப்பினர்.

## சேவைநலம் பாராட்டுவிழா

பூநகரி, ஏப். 9

பூநகரி தபாலகத்தில் கடந்த ஒரு வருடமாக உதவி அதிபராக கடமையாற்றி முதலாம் வகுப்பு தபாலதிபராக பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம் தபாலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள திரு. க. தம்பி ஐயாவுக்கு சேவை நலம் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

விழாவை பூநகரி தபாலதிபரும், ஊழியர்களும், பூநகரி குதி உபதபாலக பணியாளர்களும் இணைந்து நடத்தினர்.



பொய்யாமொழி

குறள்:
காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு

பொருள்:
அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக்காக்க வேண்டும். அந்த அடக்கத்தை விட மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை

## படையினர் கைது செய்த மூளைக்காய்ச்சல் நோயாளி எங்கே?

மட்டக்களப்பு, ஏப். 9

மட்டக்களப்பு வைத்தியசாலை வார்ட்டில் இருந்து ஆயுதப்படையினரால் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்ட மூளைக்காய்ச்சல் நோயாளி எங்கே?

அவரது நிலை என்ன?

இதுபற்றிய தகவல் எதுவும் பெறமுடியாத நிலையிலிருப்பதாக அவரது உறவினர்கள் பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளார்கள்.

செங்கலடி வாசியான கந்தையா குணசேகரம் (28 வயது) என்னும் நோயாளிதான் மேற்படி நபர்.

இது தொடர்பாக அவரது சகோதரரான கே. பாக்கியராஜா பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளார்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி மூளைக்காய்ச்சல் நோய் காரணமாக வைத்தியசாலையில் இவர் சேர்க்கப்பட்டார்.

உணர்வற்ற நிலையில் படுத்தபடுக்கையாக கிடந்த இவரை ஆயுதப் படையினர் கொண்டு சென்றனர்.

திரு-கருக்காமுனை ஆசிரியரான இவர் முகமூடியின் தலையாட்டலை அடுத்து கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### விவரங்கள் சேகரிப்பு

தாளையடி, ஏப். 9

கடல் வலயத்தினால் பாதிப்படைந்த மீனவக் குடும்பங்கள் பற்றிய தகவல்கள் யாழ் மாவட்டத்தில் அவ்வப்பகுதி மீன்பிடிப் பரிசோதகர்களினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பாதிப்படைந்த மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்கும் முகமாகவே, அவர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

## முழங்காலில் அல்லது கைகளை உயர்த்தியபடி நிற்கும் நிலை இனியும் ஏற்பட மாட்டாது என

### பிரஜைகள் குழுவிடம் இணைப்பு அதிகாரி உறுதி

மட்டக்களப்பு, ஏப். 9

ஆயுதப்படையினர் சோதனையிடும் போது முழங்காலில் இருத்தல், கைகளை உயர்த்தியபடி நிற்றல் போன்ற அசௌகரியங்கள் இனி ஏற்பட மாட்டா

இத்தகவலை மட்டக்களப்பு இணைப்புஅதிகாரி தன்னை சந்தித்த பிரஜைகள் குழு உறுப்பினர்களிடம் தெரிவித்தார்

குழு செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து, உபதலைவர் வண. பிதா சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் இணைப்பு அதிகாரியைச் சந்தித்தனர்.

அண்மையில் கல்லடி பகுதியில் இடம்பெற்ற சோதனைகளின் போது அரச ஊழியர் மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் தடுக்கப்பட்டனர். அடையாளக்கார்ட் உத்தியோகக் கார்ட், ஆகியவற்றைக் காட்டி அறிமுகப்படுத்தியும் விடுவிக்கப்படாமல் ... ... செல்லப்பட்ட பின்பு விடுவிக்கப்பட்டனர். இது குறித்தும் இணைப்பு அதிகாரியிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

மட்டக்களப்பு முகாம்களிலும், பொலீஸ் நிலையங்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை உறவினர்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படவேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டது

மேற்கண்ட விவரங்கள் குறித்து தான் ... ... எடுப்பதாக இணைப்பதிகாரி ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹேலீஸ் பற்றி உலகுக்கு தகவல் தந்த அல்லின் ஏப்ரஹாம் நினைவாக முத்திரை வெளியிட கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 9

ஹேலீஸ் வால் நட்சத்திரத்தின் வருகை பற்றி 1910 ஆம் ஆண்டில் உலகுக்கு முதலில் அறிவித்த வானியல் மேதை திரு. அல்லின் ஏப்ரஹாம் அம்பலவாணர் நினைவாக முத்திரை ஒன்று வெளியிடுக!

இவ்வாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று அமரர் அல்லின் ஏப்ரஹாம் அம்பலவாணர் நினைவு தினக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் யாழ் பல்கலைக் கழக ஆங்கில கற்பித்தல்துறைத் தலைவர் திரு. சி. க. சிவகுருநாதன் தலைமையில் நினைவு தினக் கூட்டம் நடைபெற்றது

யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பேசுகையில்,

காரைநகர் தந்த பிரபல வானியல் மேதை அல்லின் ஏப்ரஹாம் அம்பலவாணர் கணிதம், வானசாஸ்திரம், சங்கீதம் ஆகியவற்றை யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்தார் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் தமிழ் படித்தார்.

கல்லூரியில் தொலைநோக்கிக் கருவியைப் பயன்படுத்தியே 1910-ம் ஆண்டில் ஹேலீஸ் வால் நட்சத்திரத்தின் வருகையை அவர் முதன் முதலில் உலகுக்குத் தெரியப்படுத்தினார்'' என்று சொன்னார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கதிர்காமர், யாழ் வான சாஸ்திர சங்கத் தலைவர் திரு. டபிள்யூ ஏ. செந்திநாதன், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தலைவர் திரு. தி. விஸ்வநாதன் ஆகியோரும் பேசினர்.

நினைவு முத்திரை வெளியிடக்கோரும் பிரேரணையை திரு தி விஸ்வநாதன் முன்மொழிந்தார். திரு எஸ். தி. பூபாலபிள்ளை வழிமொழிந்தார்.

காரைநகர் அல்லின் ஒழுங்கைச் சந்தியில் அன்னாரின் நினைவாக பொருத்தமான நினைவுச் சின்னம் ஒன்றை நிறுவுவது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

BECON 156|3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
86 A/L
ஒளியியல் சனி, ஞாயிறு—7 15
ஒட்டமின்னியல் சனி, ஞாயிறு—8.30
திரு. யோகேந்திரா B.Sc.
சேதன இரசாயனம் சனி, ஞாயிறு—3.00
பௌதிக இரசாயனம் சனி, ஞாயிறு—4.00
திரு. அன்ரன் B.Sc.
ஆரம்பம்: 12 - 4 - 1986

உதயன்

09 04 1986 புதன்கிழமை

BECON 156 3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
86 A/L Day Class
வினு விடை வகுப்புக்கள்
பொருளியல் - திரு. வரதராஜன்
வர்த்தகமும் நிதியும் - திரு. ரட்ணம்
கணக்கியல் - திரு. மரியதாஸ்
அளவையியல் - திரு. S. S. மனோகரன்
ஆரம்பம்: 15-4-86 12.00 (திங்கள்)
(முழுப் பாடத் திட்டமும் முடிக்கப்படும்)

# சவளக்கடைப் பகுதி:

# 140 குடும்பங்கள்

# இடம் பெயர்வு

## வேல் முருகு தலைமையில் அப்துல் மஜீத்திடம் முறையீடு

அம்பாறை.ஏப்ரல்.9 அம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறைத் தொகுதியின் சவளக்கடைப் பகுதியிலும் 7ஆம் கொலனிப் பகுதியிலும் இருந்து 140க்கு மேற்பட்ட தமிழ்க்குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ தடை முகாமிலிருந்து மேற்கொள்ளப்படும் தேடுதல் நடவடிக்கைகளே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் சமீபகாலமாக தீவிர இராணுவ தேடுதல் வீடுவீடாக நடத்தப்பட்டு வருகிறது 17 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தேடுதல் வேட்டையின்போது மக்கள் குறிப்பாகப் பெண்கள் வெறுக்கும் முறையிலான நிர்ப்பந்தங்களும் முறைகேடுகளும் அங்கு இடம்பெறுகின்றன என்றும் முறையிடப்பட்டுள்ளது.

கண்ணீரும் கம்பலையுமாக கிராமங்களை விட்டு வெளியேறியுள்ள அப்பாவித் தமிழ்மக்கள் அம்பாறை அபிவிருத்திச் சபை முன்னாள் உறுப்பினர் திரு வேல்முருகு தலைமையில் மூதூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி தபால் தந்தி தொடர்புகள் அமைச்சருமான ஜனாப் அப்துல் மஜீத்திடம் சென்று முறையிட்டனர்.

பெண்களில் சிலர் தமக்கு நேர்ந்த அருவருப்பான அனுபவங்களைப் பிரதி அமைச்சரிடம் கண்ணீருடன் கூறினர்.

மக்களின் முறையீடுகளைச் செவிமடுத்த ஜனாப் அப்துல் மஜீத் மக்களை அவரவர் இடங்களுக்குத் திரும்பிச் சென்று அமைதியாகஇருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சருடன் தாம் தொடர்பு கொண்டு மேலும் தொல்லைகள் ஏற்படாது பார்த்துக்கொள்ள முயற்சிப்பதாகவும் கைது செய்யப்பட்ட 17 பேரையும் விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்வதாகவும் பிரதி அமைச்சர்தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்து மக்கள் என்னதான் நடந்த போதும் இடம்பெயராது இருப்பதையும் பிரதி அமைச்சர் அந்த மக்களுக்குச் சுட்டிக் காட்டினார்

# தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி

## கொழும்பில் மறியல்

கொழும்பு, ஏப்ரல் 9 தாதிகள் தொழிற் சங்கம் மீது விதிக்கப்பட்ட தடையை ஆட்சேபித்து கொழும்பில் தொழிற் சங்கங்கள் கூட்டுக்கமிட்டி நேற்று மறியல் நடத்தியது.

தொலை தொடர்பு ஊழியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அரச அலுவலகங்கள், வங்கிக்கிளைகள் முன் னர் நேற்று மறியல் செய்தனர்.

அதே நேரத்தில் தாதிமார்சங்கத் தலைவர் வண. முருட்டெட்டுவத்த ஆனந்த தேரர் தலைமையில் பிக்குகள் நாரஹென்பிட்டியில் நேற்று சத்தியாக்கிரகம் செய்தனர்

தாதிமார் வேலை நிறுத்தம் தொடரும் என்று ஆனந்ததேரர் அச்சமயம் சொன்னார்.

## பஸ் அனுப்புமாறு கேட்ட மர்ம மனிதர் யார்?

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9 யாழ் செயலகத்தில் இருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் தொலைபேசி அழைப்பின் பின்னால் இருந்த 'மர்ம மனிதர்' யார்?

யாழ் செயலக அதிகாரிகள் இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நேற்று பிற்பகல் 4-30 மணியளவில் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று யாழ் செயலகம் சென்றது.

சாரதியும் கண்டக்டரும் செயலகம் சென்று உயர் அதிகாரி ஒருவரைச் சந்தித்தனர்.

"பஸ் ஒன்றை அனுப்பும்படி அரச அதிபரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது பஸ்ஸுடன் வந்துள்ளோம்" என்றனர் கண்டக்டரும் சாரதியும்.

செயலகத்தில் இருந்தா அழைப்பு வந்தது? இப்படி உயர் அதிகாரி கேட்டார்.

அரச அதிபரும் பொதுசன தொடர்பு அதிகாரியும் கொழும்பில் நிற்கிறார்கள். இங்கிருந்து ஒருவரும் தொலைபேசியில் பஸ் அனுப்பும்படி கூறவில்லையே - திருப்பிச் சொன்னார் அந்த உயர் அதிகாரி. விஷயத்தைப் புரிந்து கொண்ட சாரதியும் கண்டக்டரும் தாமதிக்கவில்லை.

'அப்படியா! வருகிறோம்' -என்று சொல்லிவிட்டு அவசரம் அவசரமாக பஸ்ஸைத் திருப்பிக் கொண்டு டிப்போ போய்ச் சேர்ந்தனர்.

அந்த மர்ம தொலைபேசி அழைப்பைச் செய்தவர் யார்?

மர்மம் நீடிக்கிறது.

## யாழ் பஸ் நீர்கொழும்பில் விபத்து

கொழும்பு, ஏப்ரல் 9 கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று நீர்கொழும்பு, கொச்சிக்கடைப் பகுதியில் தடம் புரண்டது

சாரதியும் ஐந்து பயணிகளும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

ஊர்மக்கள் விபத்தில் சிக்கிய பயணிகளுக்குப் பெரும் உதவி செய்தனர்

## கல்லூரி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி) மாய் வருகின்றது என்று மாணவன் சொன்னார்.

உடனே அங்கே ஊர்காவற் படையினர் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதித்துவிட்டு தங்கள் பொறுப்பதிகாரியிடம் விஷயத்தைத் தெரிவித்தனராம்.

அதிபரை வரும்படி பொறுப்பதிகாரி அழைத்தார். ஆனால் அதிபர் வரவில்லை

உடனே பொறுப்பதிகாரி ஊர்காவல் படைவீரர்களுடன் அதிபரைத் தேடிச் சென்றார்.

ஊர்காவல் படையினரைக் கண்டதும் பாடசாலைக்குள் அதிபர் ஓடிப் போய் ஒளிந்துகொண்டார். பின்னர் மின் ஒன்றுக்குள் ஓடினராம். 20 ஊர்காவல் படையினர் வரையில் அதிபரைப் பிடித்துக்கொண்டு நையப் புடைத்தார்களாம்.

பின்னர் அதிபரை பிரதான வீதி ஊடாகக் கோஷங்களுடன் இழுத்துக் கொண்டு வந்தனர்.

அதிபர் இச் சம்பவம் பற்றி பொலீஸாரிடம் முறையிட்டார்.

சம்பந்தப்பட்ட ஊர்காவல்படையினரும் அதிபரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

## அர்த்தமற்ற அபாண்டம்

புதுடில்லி, ஏப். 8 அமெரிக்காவிடம் பாரதம் ஆயுதம் கொள்வனவு செய்கிறது என்ற குற்றச்சாட்டு அபாண்டமானதும் அர்த்தமற்றதுமாகும்

புதுடில்லி பாராளுமன்ற விவாதத்தில் பேசும்போது பாரத பாதுகாப்புத்துறை ஸ்டேட் மந்திரி அருண் நேரு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது!

பாரதமும் அமெரிக்காவும் பொருளாதார மற்றும் தொழில் நுட்பத்துறைகளில் ஒத்துழைப்பு உறவு கொண்டிருக்கிறதே தவிர வேறில்லை எனவும் அழுத்திக் கூறினார்.

# விளையாட்டரங்கு

# சென்ரலைட்ஸ் வெற்றி ஜொலிஅணி சரிந்தது

உ-1விளையாட்டுச் செய்தியாளர் சன் ஜோன்சன்-:-

யாழ்ப்பாணம்,ஏப்ரல்9 யாழ் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வென்றது

யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

கே. மனோஜ் குமார், கே.தொமஸ், பி ராஜேந்திரா ஆகியோர்முறையே 21, 31, 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

எஸ். பி எஸ். இளங்கோ 4 விக்கெட்டுகளையும், ஆர். விஜயகுமார், வை. ஜெயந்தன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் பி பிரபானந்தன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய ஜொலி ஸ்ரார்ஸ் அணி 96 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பி. பிரபானந்தன் 19 ஓட்டங்களையும் எஸ் உமாகாந்தன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

கே. தொமஸ், கே மனோஜ்குமார், ஜி ரெஃமான் ஆகியோர் முறையே 9, 2, 1 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்தப்போட்டிக்கு எஸ் விமலதாசன், ஆர் செல்வரத்தினம் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

## மென்பந்து கிரிக்கெட்

### சுற்றுப் போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.9 சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் வருடாந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது

சென்ரலைட்ஸ் சுற்றுக் கிண்ணத்துக்கான இப் போட்டி 20 ஓவர்களைக் கொண்ட போட்டியாக அமையும்.

இன்று நடைபெறும் போட்டியில் யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வியங்காடு யுனைட்ரட் விளையாட்டுக் கழக அணி மோதும்.

இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## மென்பந்து கிரிக்கெட்

### விறுவிறுப்பாக நடைபெறும் நொக்கவுட் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9 ஈச்சமோட்டை சனசமூக விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வரும் "நொக்கவுட்" முறையிலான போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் சில்வர் ஸ்ரார் விளையாட்டுக் கழக நீல அணியை எதிர்த்து கொய்யாத்தோட்ட விளையாட்டுக் கழக அணியும் —

ஈச்சமோட்டை சனசமூக நிலைய (ஏ) அணியை எதிர்த்து இளஞ்சிங்கம் விளையாட்டுக் கழக அணியும் —

அராலி கலைவாணி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளந்தாரகை விளையாட்டுக் கழக அணியும் மோதும்.

# இரவில் கதவுகளை தட்டுவோர்!

## கிளிநொச்சியில் பீதி

கிளிநொச்சி, ஏப்ரல் 9 கிளிநொச்சியில் கடந்த சில தினங்களாக தேடுதல் நடவடிக்கைக்காக இரவோடிரவாக முகாமிலிருந்து வெளியே வருவோர் மக்கள் நித்திரையில் இருக்கும் சமயம் வீட்டுக்கதவுகளைத் தட்டி வீட்டாரை நித்திரையிலிருந்தும் எழுப்புகிறார்களாம்.

வீட்டிலிருக்கும் சிலரது பெயர்களைச் சொல்லி அழைக்கிறார்கள் என்றும் சந்திகளில் நின்று கூச்சலிடுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இச்சம்பவங்களின் போது வீட்டுக்கு வெளியே வருவோர் இம்சிக்கப்படுகின்றனர் சிலர் கைது செய்யப்படுகின்றனர்.

இதனால் கிளிநொச்சி மக்கள் பீதி அடைந்துள்ளனர். இரவு வேளைகளில் வீட்டுக்கு வெளியே வர அஞ்சுகின்றனர்.

## கிளிநொச்சியிலும் துண்டுப்பிரசுரம்

கிளிநொச்சி, ஏப் 9 நேற்று முன்தினம் கிளிநொச்சி, திருநகர், ஜெயந்திநகர்ப் பகுதிகளிலும் ஹெலிக்கொப்டரில் இருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன.

யாழ் இராணுவத் தலைமையால் பிரசுரிக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய துண்டுப் பிரசுரங்களே அவை.

இதற்குமுன் தொண்டமனாறு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும் இப்படியான துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டது தெரிந்ததே

## இலங்கை . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி) துள்ளார்.

இதனை அடுத்து இலங்கைவங்கி முன்பாக மறியல் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. எனினும் மக்கள் வங்கி முன்பான மறியற் போராட்டம் புதிய திட்டம் அமுல் படுத்தப்படும் வரை தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாறு அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது

## குளத்தில்..

(1ஆம் பக்க தொடர்ச்சி) பகல் சுமார் 150க்கும் அதிகமான சிப்பாய்கள் தம்பிலுவில் கிராமத்தைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

அப்போது படையினரால் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

அப்போதே படுகாயம் அடைந்த ஒரு நபரைப் படையினர் அழைத்துச் சென்றனர்.

## ஈரானிய குண்டு வீச்சு!

# வல்வை இளைஞர் பரிதாப முடிவு!!

வல்வெட்டித்துறை, ஏப் .9 எண்ணெய்க் கப்பலில் கடமையாற்றிய வல்வை இளைஞர் ஈரானிய துருப்புக்களின் குண்டு வீச்சில் அகப்பட்டு மரணமானார்.

ஜெட்டாவிலுள்ள கப்பல் கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான "பெற்ரோ ஸ்ரார் - 16" என்ற எண்ணெய்க் கப்பலே தாக்குதலுக்கு உள்ளானது.

இக் கப்பலில் மாலுமியாகக் கடமையாற்றிய வல்வை இளைஞர் ஆறுமுகம் பாலச்சந்திரமூர்த்தி (25 வயது) இறந்துவிட்டார் என்று சம்பந்தப்பட்ட கம்பனி இங்கு அறிவித்துள்ளதாம்.

இக்கப்பல் டமாமில் இருந்து பாஹ்ரானுக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் ஈரானிய யுத்த விமானங்களின் குண்டு வீச்சுக்கு உள்ளானது.

# அடகு நகைகளை

## மீளளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 9 தமிழ் சிங்களப் புத்தாண்டு தினத்தின் பின்னர் அடகு வைக்கப்பட்ட நகைகள் மீளளிக்கப்படும்.

இப்படி மக்கள் வங்கித் தலைமைப் பீடம் உறுதியளித்துள்ளதாக மக்கள் வங்கி யாழ் பிராந்திய முகாமையாளர் திரு. மு. கணேசசுந்தரம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் அண்மையில் நடந்த மாநாட்டில் எடுத்த முடிவின் படியே மக்கள் வங்கித் தலைமைப் பீடம் இந்த உறுதிமொழியை அளித்துள்ளது

பலாலி முகாமுக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் வைத்து நகைகள் மீளளிக்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு மக்கள் வங்கிக்கிளைதன்னிடம் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளளிக்கும்.

இப்படி தலைமைப் பீடம் உறுதியளித்துள்ளது.

எனவே அடகு வைத்தோர் சங்கம் வாடிக்கையாளர், பொதுமக்கள் நலன் கருதி மறியல் போராட்டத்தைக் கைவிட வேண்டும்.

இப்படி பிராந்திய முகாமையாளர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மேலும் 150 கோடி ரூபா தேவைப்படுகிறது

பாதுகாப்புச் செலவினத்துக்கு இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள பணத்திலும் பார்க்க இன்னும் 150 கோடி ரூபா தேவைப்படுகிறது

இப்படி தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி சொன்னார்.

கொழும்பு மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் அமைச்சர் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நாட்டின் பாதுகாப்புக்கு அதிக பணம் தேவைப்படுகிறது.

இக்கட்டான இந்த நிலையில் தாதிகள் வேலை நிறுத்தம் செய்வது தேசநலனுக்குப் பாரதூரமானது

தீவிரவாதிகளின் தாக்குதல்களை எதிர்க்கவும் படையினருக்கும் [illegible] வாவது தாதிகள் வேலைக்குத் திரும்பவேண்டும்.

## சாவகச்சேரியில் திங்கள்

# ஹெலிக்கொப்டர் சூடு

மரணவீட்டுக்கு சென்றிருந்தவர் மீது ஹெலிக்கொப்டர் துப்பாக்கிச் சூடு இதனால் சிலர் காயமடைந்தனர்

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்று முன் தினம் சாவகச்சேரியில் உள்ள ஓர் இடத்தில் மரணவீடு நடந்து கொண்டிருந்தது.

அங்கு ஏராளமானோர் இருந்தனர்.

அப்பொழுது ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்து அப்பகுதியை நோட்டமிட்டதாம்.

அதனை அடுத்து அங்கிருந்து சிலர் வெளியே ஓடினராம். பின்னர் ஹெலிக்கொப்டர் இவர்களைத் துரத்திச் சுட்டது

இதனால் சிலர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

## மரணம்

கொழும்பு, ஏப்ரல் 9 அனுராதபுரம் மாவட்டத்தில் பராக்கிரமபுரவுக்கு [illegible] இரண்டு சிங்கள கிராமவாசிகள் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்கள்.

# பிக்குகளின் பின்னால் ரகசியப் பொலீஸார்

## மகாநாயக்க தேரர் கவலை

கொழும்பு, ஏப்ரல். 9 பௌத்த பிக்குகளின் பின்னால் ரகசியப் பொலீஸார் தொடருகின்றனர்.

இத்தகவலை அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் பலிப்பான சந்தானந்த வெளியிட்டார்.

நாத்தாண்டியாவில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் கடந்த ஞாயிறு அஸ்கிரிய பீடாதிபதி பேசினார்.

2,000 பிக்குகள் வரையில் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்

இனப் பிரச்சினையில் தமிழருக்கு எதிரான கடும் போக்கை அனுட்டிப்பவர் அஸ்கிரிய பீடாதிபதி.

அஸ்கிரிய பீடாதிபதி மேலும் சொன்னதாவது:-

பௌத்த பிக்குகளுக்கும் இந்த நாட்டில் அதிகாரம் உண்டு.

நாம் மௌனமாக இருக்க முடியாது.

மகா சங்கம் மௌனமாக இருந்தால் சிங்கள இனம் அழிந்து விடும்.

சிங்கள மக்களின் நலன்களைக் காப்பவர்கள் மகா சங்கத்தினர்.

இன்று அரசோ பிக்குகளின் பின்னால் சி ஐ டி. பொலீஸாரை அனுப்புகின்றனர்.

## 4 சடலங்கள்

தஞ்சாவூர், ஏப்ரல் 8 தமிழ் நாட்டில் வேதாரணியம் கடற்கரையில் 4 சடலங்கள் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

அகத்தியம்பள்ளி, வள்ளம்பள்ளம் ஆகிய இடங்களில் இச்சடலங்கள் கரை ஒதுங்கின.

ஒரு சடலம் தலையின்றி காணப்பட்டது.

இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்து இலங்கைக் கடற்படையினர் சுட்டதால் இவர்கள் இறந்தனர் என்று தமிழ் ஈழவிடுதலை இராணுவம் சென்னையில் அறிவித்துள்ளது.

அந்த அமைப்புகளுக்கு

நன்றி

எமது சங்கத்தின் இரு வாகனங்களில் ஒன்றான 24 ஸ்ரீ 9858 ஆம் இலக்க (TATA BENZ) லொறி எமக்கு மீண்டும் கிடைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இவ்வாகனம் எமக்குக் கிடைத்ததை எமது சங்கத்தின் செயற்பாட்டிற்கும் கூட்டுறவு அமைப்புக்கும் அளிக்கப்பட்ட கௌரவமாகக் கருதுகின்றோம். இவ்விடயத்தில் விரைந்து செயற்பட்ட அனைத்து அமைப்புக்களுக்கும் எமது மனங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதேவேளை மற்றைய வாகனமாகிய 34ஸ்ரீ 583 நூல் விநியோக வான் (TOYOTA HIACE) எமக்கு இதுவரை கிடைக்கவில்லை. தயவுசெய்து இவ்வான் விடயத்திலும் விரைந்த செயற்பாட்டை மேற்கொண்டு வானை மீட்டுத் தரும் வண்ணம் அமைப்புக்களைப் பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

நிர்வாகிகள், ஊழியர்கள்,
யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன் லிமிட்டெட்,307 ,மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15,8 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 09-04-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ/80 N 86

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org